481

Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

18 JAN 19

Vol IV] AUGUST 1922 [No. 8

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

3L
LL, 9(M211, M4
M22·4·8.
186456

ption Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருடசந்தா தபாற்கூலி யுட்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரு. 1 8 0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	ரு. 2 0 0
தனி சஞ்சிகை	.. ...	விலை ரு. 0 2 6

1. பத்திரிகைக்கு ஜனவரி மீ முதல் டிசம்பர் மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் கட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி. பி. யில் பெற்றுக்கொள்வதால் அணா மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	...	ரூபா.	10—0—0
அரைப் பக்கத்திற்கு	,,	...	,,	6—0—0
கால் பக்கத்திற்கு	,,	...	,,	3—0—0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.



(5) "ஸ்ரீ வாமனவதாரம்."

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 013

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922ஆம் ஆகஸ்டுமீ | பகுதி 8

ஸ்ரீவாமனாவதாரம்

விரோசனன் என்னும் ஓரசுரன் இருந்தான். அவன் மிக்க வல்லமை சாலியாயும், திரண்ட செல்வவந்தனாயு மிருந்தான். ஒரு குறையுமில்லாத அவனுக்குத் தனக்குப்பின் தன்னுடைய அகண்ட செல்வத்தை அநுபவிப்பதற்கு ஒருபுத்திரனில்லையே என்கிற பெருங்குறை யொன்றுதான் அவன் மனதை அடிக்கடி வருத்தி வந்தது. தன் மந்திரி பிரதானிகளைப் பார்த்து அவ்வசுரன், " எனக்கும்

186456.

* 'பிறிதொரு குறையிலை (1) எற்பின் வையகம்
(2) மறுகுறும் என்பதோர் (3) மறுக்கம் உண்டரோ?'

அன்றியும், நானெடுத்த உடலுக்கும், கொண்ட செவிக்கும் இன்பத்தை யூட்டவல்லது மகப்பேறென்றுதானே.

'மக்கள் மெய்தீண்டல் உடற்கு இன்பம் மற்றவர்
சொல் கேட்டல் இன்பஞ் செவிக்கு'

என்று தமிழ்வேதமுங் கூறுகின்றதே" என்று சொல்லி, இதுகைகூடுவதற்குரிய உபாயத்தைத் தெரிவிக்க வேண்டினன். அவர்கள் "எல்லாம் வல்ல கடவுளருளாலேயே அது சித்திக்கத்தக்கது" என்றார்கள். செல்வத்தின் இறுமாப்பால் அவன் கடவுளை (4) அநாதரித்து வந்தான். இப்படி பகவானை அநாதரிப்பவர்க்குத் தாங்கள் கொண்ட எண்ணம் ஒரு காலத்தும் நிறைவேறாது என்னும் உண்மையைத் தெரியாது பலநாள் மனம் வருந்திக்கொண்டிருந்தான்.

† (5) "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ-இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

என்று தனக்குள் தானே கூறிக்கொண்டு சோகமுறுவான்.

பின்பு பெரியோர்களால் தான் செய்ய வேண்டியதைத் தெரிந்துகொண்டு புத்திரனைப் பெற வேண்டு

---

* (1) எற்பின்-எனக்குப்பிறகு; (2) மறுகுறும்-வருத்தப்படும்; (3) மறுக்கம்-மனக்குழப்பம்; (4) அநாதரித்தல்-கைவிடல்.

† (5) பொன்-திரவியம்; புகழ்-கீர்த்தி; இன் அடிசில்-இனிமையான போஜனம்; புக்கு-கையிட்டு; அளைதல்-பிசைதல்; பூ நாறும்-புஷ்பத்தின் மணம்போல; செய்ய-சிவந்த.

மென்னும் பேராசையால் தன் இறுமாப்பை விட்டு விட்டு இளகிய மனதுடன் ஈசுவரனை இடைவிடாது பிரார்த்தித்து அருந்தவஞ் செய்தான். பகவானும், யார் தமது பாதாரவிந்தத்தில் பக்தியோடு நம்பிக்கை வைக்கின்றார்களோ அவர்களுக்கு அன்போடும் அருள் செய்பவராகையால் விரோசனன் பக்திக்கு மெச்சி அவனுக்கோர் ஆண்பிள்ளையுண்டாகுமாறு ஆசீர்வதித்தார். அந்த அநுக்கிரகத்தால் பிறந்த குழந்தைக்கு அவன் மகாபலி என்று பெயரிட்டான். அக்குழந்தைக்கு ஐந்து வயது பூர்த்தியாகும் முன்னமே தன் குலத்திற்குரிய தைரியமும் வீரமும் அஞ்சாத நெஞ்சும் இயல்பாகத்தோன்றி வயதளவில் பெருக வளர்ந்து வந்தன. யானை புலி சிங்கம் இவைகள் போல் செய்யப்பட்ட மரப்பொம்மைகளை நமது குழந்தைகள் வைத்து விளையாடுவது வழக்கம். ஆனால் மகாபலிக்கோ உண்மையான யானை புலி சிங்கந்தான் விளையாட்டுப்பொருள்கள். அவனுடைய பெரும் பலத்தைக் கண்டு அவைகள் வாலை யிடுக்கிக்கொண்டு பயந்து நடுங்கி பல்லைபிளித்துக் கெஞ்சும் பாவனையாய் ஒருபுறம் நிற்கும். குழந்தையாகிய மகாபலி அவற்றின் வாலைப்பிடித்து வலித்திழுத்துவந்து வலசாரி இடசாரியாக ஓட்டுவான். முளைக்கையிலேயே அவனுக்கு முரட்டுத்தனமும் மருட்டுங்குணமும் தழைத்தோங்கி வந்தன. மகாபலி யென்னும் பதமே அதிக பலமுள்ளவன் என்கிற பொருளைக் காட்டுகிறது.

இளமையிலே இந்த மஹாபலி தன் குலகுருவாகிய **சுக்கிராசாரி**யிடம் பல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து போருக்குரிய அஸ்திர சஸ்திர வித்தைகளையும் ஐயந்

திரிபுற ஆசையோடு கற்றுப் பழகிப் பூலோகத்திலும் மேல்லோகத்திலும் தனக்கொருவர் இணையில்லை யென்ற கர்வத்தைக் கொண்டவனுய்க் காலனையும் எதிர்த்துக் கலங்கச் செய்பவன்போல் காளைப்பருவத்தை யடைந் தான்.

இயல்பிலேயே இறுமாப்பும் விண்ணும் மண்ணும் விலவிலக்கும் பலமும் இம்மகாபலிக்கிருந்தன வென்று லும் இன்னும் பெரும்பலத்தை அடைய வேண்டும் என் னும் பேராசையால் இவன் அகோரமாகத் தவம் புரியத் தலைப்பட்டான்; ஆசைக்கு அளவேது? பெரிய பெரிய யாகங்களைச் செய்ய முற்பட்டான். இவைகளின் பலனுக எண்ணுதற்கரிய பராக்கிரமம் இவனை வந்தடைந்தது. இப்படித் தன் சரீர பலமும் தவப்பலமும் ஒன்று சேரவே மகாபலி திக்கு விஜயம் செய்ய ஆசை கொண்டான். சென்ற இடங்களில் எல்லாம் தன் புஜபலத்தைக் காட்டி வெற்றி பெற்று ஜயகோஷத்துடன் திரும்பிவந்தான் இவ்வாறு இவன் பலலோகங்களையும் ஜயித்துத் தன் ஆளுகைக்குக் கீழ் அடக்கி வருநாளில் தேவர்களுடைய லோகத்தையும் ஜயிக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டு அசுரக்கூட்டங்களை அணிவகுத்துக் கூட்டித் தேவலோகஞ் சென்றான். அங்கு அசுரர்களுக்கும் தேவர் களுக்கும் பெரிய யுத்தம் ஒன்று நடந்தது. அந்த யுத் தத்தில் தேவேந்திரன் தோற்று ஓடிப்போகவே, தேவ லோகத்தை மகாபலி தன் வசப்படுத்திக்கொண்டான். அவனுடைய கொடுமையைக் கண்டஞ்சி தேவேந்திரனும் தேவர்களும் மாறுவேஷம் பூண்டு பூலோகத்து மன்னர் களுடன் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

மகாவிஷ்ணு தமது அன்பனாகிய இந்திரனுக்குக் கொடுத்தருளிய தேவலோகத்தை கொடிய அசுரனான மகாபலி அநியாயமாகப் பிடுங்கிக் கொண்டதனால், தேவேந்திரன் மிகவும் மனம் வருந்தித் தேவர்களையும் இன்னும் அக்கொடிய அசுரனால் வருத்தப்பெற்ற முனிவர் ரிஷிகளையும் அழைத்துக்கொண்டு பிரமதேவனிடம் சென்று முறையிட்டான். தம்மிடம் வந்து குறை சொல்லிக்கொண்ட தேவேந்திரன் முதலியவர்களைப் பார்த்து பிரமன் "நீங்கள் சொல்லும் அசுரனான மகாபலி அழியாத பலத்தையுடைய கொடிய சண்டாளன். அவனை நேரில் யுத்தஞ் செய்து ஜெயிப்பது எவர்க்குமே அரிது. இந்த விஷயத்தைச் சர்வலோக சரண்யரான மகா விஷ்ணுவினிடத்தில் தான் தெரிவிக்கவேண்டும். தெரிவித்தால் அவர் அவனை அடக்கத்தக்க முயற்சி செய்வார். உங்களோடுகூட நானும் வருகிறேன். வாருங்கள் போகலாம்" என்று வந்தவர்களனைவரையும் கூட்டிக்கொண்டு திருப்பாற்கடலை யடைந்தார். அங்கு நின்று எல்லோரும் ஸ்ரீமந் நாராயணரைத் துதிசெய்யவே அவர் தேவேந்திராதியருக்குக் காட்சி தந்தருளினார். பிரமன் முதலியோர் ஸ்ரீமந் நாராயணனை நமஸ்கரித்துத் துதித்து மிகவும் பயபக்தியோடு கைகட்டி வாய்புதைத்துத் தங்களுடைய குறையைச் சொல்லி, "ஸ்வாமி! அந்தக்கொடும்பாவியாகிய மகாபலியினுடைய கொடுமையைச் சகிக்க எங்களாலாகவில்லை. அவன் எங்கள் இடங்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டு எங்களையும் ஹிம்சிக்கிறான்; அவன் ஹிம்சையை இன்னவிதமென்று எடுத்துச் சொல்ல இயலாது. நித்திய கண்டமாய் இருக்கின்றதே" என்று எல்லோரும் சாஷ்

டாங்கமாய் நமஸ்காரம் செய்து துதித்து நின்றனர். உலக மெல்லாவற்றையும் படைத்துக் காத்தருளும் பரம தயா நிதியாகிய மகா விஷ்ணு தம்மை வணங்கிய தேவர் முனிவர் இவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்கு இனிய வார்த்தை கூறுவாராயினர்.—"உங்களுக்கு வந்த இடையூறுகளை நாம் அறிந்தோம். விதிப்படி எல்லாம் நடந்தேறும் என்பதை நீங்கள் செம்மையாக அறிந்தவர்களாதலால் உங்களுக்கு அதிகமாகச் சொல்லவேண்டிய தொன்றுமே இல்லை. காசியபமுனிவரின் பத்தினியாகிய அதிதியிடம் நாம் அவதாரம் செய்து அந்தப் பலியாகிய துஷ்டனை அடக்கி உங்களுக்கு உரியவைகளைத் திருப்பித்தருவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். தேவர்கள் முதல் யாவரும் ஸ்ரீமந்நாராயணனின் திருவருளை யெண்ணி அஞ்சலியஸ்தராய் தத்தம் இருப்பிடஞ் சென்றனர்.

காசியபமுனிவர் முக்காலத்தையும் உணரத்தக்கவர். சகல சாஸ்திரங்களிலும் கரைகடந்த ஞானமுடையவர்; எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் நுண்ணறிவினர், பரிசுத்தமான மனதுடையவர்; நன்னெறியில் நாளும் பழகியவர். அவருடைய மனைவியாகிய அதிதியோ குற்றமற்ற குலத்திலுதித்தவள். கணவனையே தெய்வமெனக்கொண்டாடும் பெருமையுடையவள்; நாயகன் சொல்லை வேதமாகவெண்ணி அதினின்று ஒரு சிறிதும் விலகாத கற்புடையவள்; அடுத்தவரை ஆதரிக்கும் அன்புடையவள். இத்தகைய உத்தமியைப் பார்ப்பது வெகு அருமை. இவளுடைய புதல்வரே தேவர்கள்.

அதிதியானவள் தன் மக்களாகிய தேவர்களும்

அவர்களுக்கரசனாகிய இந்திரனும் அசுரரால் துன்புற்றிருப்பதைச் சகியாமல் முகவாட்டத்துடன் இருந்தாள். ஒருநாள் இதை யுணர்ந்த காசியபர் அவளை நோக்கி, "நீ வாட்டமுற்றிருப்பானேன்?" என்று வினவினர். அதற்கவள்,

"மாதவ! நினது காதல் மனையவள் ஆயினேற்குத்
தீதுவந் துறுவ தில்லை ஆயினும் (என்)சிறுவ ரெல்லாம்
சூதுறு பகைவ ராலே தொல்பதி யிழந்தார் அன்னோர்
கோதுறும் இடரில் நீங்கிக் குலவரங் கருள்செய் கென்றாள்"

காசியபர் "பெண்ணே! நீ பகவானைக்குறித்து விரத மநுஷ்டித்துவரக் கடவாய். பகவான் உனக்கு அருள் புரிந்து உன் விருப்பத்தை நிறைவேற்றுவார்" என்றார்.

அதிதியும் அவ்வாறே நோன்பு நோற்றுவந்தாள்.

நின்ற நிலையில் எல்லாவற்றையும் அறியவல்லவரான மகாவிஷ்ணு அதிதியையும் காசியபரையுமே இந்த அவதாரத்தில் தாய் தந்தையராகக் கொண்டனர். அவர்களுக்குத் திருக்குமாரராய் ஐப்பசி மாதத்தில் சுக்கிலபக்ஷத்தில் திருவோண நக்ஷத்திரம் துவாதசி கூடிய சுபதினத்தில் நல்ல மத்தியானவேளையில் திருவவதாரம் செய்தனர். அவதரித்த குழந்தை பொன்னும் மணியும் பொலிந்தோங்கிய திருமுடியும், பொன்வளையமும், பாதச்சிலம்பும், பீதாம்பரமுங்கொண்டு, சதுர்ப்புஜங்களுடன் விளங்கிநின்றது. இந்த அருமைத் திருக்குழந்தைக்கு உபேந்திரன் என்று நாமகரணஞ் சூட்டினர். தேவர்கள் எல்லோரும் அந்தக் குழந்தையை வணங்கிப் பூமாரி பொழிந்தனர். அப்போது, குழந்தையான பகவான் அழகிய அவ்வுருவத்தை மறைத்துக்கொண்டு *வாமன வடிவமாய் நின்றார்.

* வாமனம்—குள்ளம்.

தாய் தந்தையரிருவரும் மகா சந்தோஷத்துடன் அக்குழந்தையை நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக அன்புடன் பேணி வளர்த்து உரிய பருவத்தில் உபநயன முதலிய திவ்விய சடங்குகளை நிறைவேற்றினார்கள். அந்தப் பிள்ளை தாய் தந்தையரிடத்தில் மிக்க வணக்கத்தோடிருந்து அவர் மனங் கோணாமல் நடந்து வந்தது. சர்வாண்டங்களுக்கும் பிதாவாகிய விஷ்ணு தம் பிதாவாகிய காசியபரிடத்தில் சகல கலைகளையுங் கற்றுக்கொண்டனர். ஞான சொரூபியாகிய அவர் தம் தந்தையிடத்தில் ஞானமார்க்கத்தை விரும்பிக் கேட்டுக்கொண்டார்.

"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை."

"தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை"

என்கிற முதுமொழி யுணர்ந்து தாய் தந்தைக் கடங்கிய புத்திரனும் குருவுக் கடங்கிய சீடனும் இவரைத் தவிற வேறொருவர் இருந்ததாக எண்ணுதற்கும் இல்லை எனும்படி அவ்வளவு அடக்க ஒடுக்கத்தோடும் அன்னை தந்தையரிடம் நடந்து கொண்டார். ஏனெனில் அவ்வாறு

"தந்தை தாயரைத் தன்முனைச் சார்நெறி
அந்த ணாளரைச் சீறும் அறிவிலோன்
இந்த லோகத் திரும்பழி யெய்திமற்
றந்த லோகத் தருநர கெய்துவான்"

என்று நூல்கள் கூறுகின்றன.

இப்படியாக வருஷங்கள் பல கழிந்தன. காசியப முனிவரின் இரண்டாவது புத்திரராகிய உபேந்திரர் கல்வியிலும் அறிவிலும் அழகிலும் கண்டோர் அதிசயிக்

கும்படி வளர்ந்தாரே யல்லாமல் தமது திருமேனியில் யாதொரு வளர்ச்சியும் நிகழாது அன்றிருந்த மேனிக் கழிவில்லையென்பதுபோல் இருந்தபடியாகவே இருந்து விட்டார். இரண்டடி உயரத்துக்குமேல் இம்மியும் வளராமல் ஜெகமெல்லாம் மெச்சச் சித்திரக்குள்ளர் எனுஞ் சிங்கார நாமத்தைப் பெற்றனர். இப்படிக் குட்டை வடிவத்தோடிருப்பதற்கு வாமனம் என்று சொல்லுவார்கள். கண்டவர் ஆச்சரியப்பட இரண்டே அடி உயரமாக துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யும் பொருட்டு நிகழ்ந்த ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் இந்த ஜெனனத்தைத் தான் உலகினர் "ஸ்ரீ வாமனவதாரம்" என்று சிறப்பாகச் சொல்லுவார்கள். (வரும்.)

கடலுலகில் வாழுமுயி ரெழு பிறப்பினுண்மிக்க
காட்சிபெறு நர சென்மமாய்க்
கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியிற்
கற்புவழி வருதலரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினுமரிது
நெடிய தனவானுத லரிததினிரக்கமுள
நெஞ்சினே னுதலரிது
நேசமுட னுன்பதத் தன்பனய் வருதலிந்
நீணிலத் ததினுமரிதாம்
அடியவர்க் கமுதமே மோழை பூபதிபெற்ற
அதிபனெம தருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே.

(அறப்பளீசுர சதகம்.)

ஹாஸ்யம்.

ஓர் அதனப்பிரசங்கியின் பிரசங்கம்.

ஒருநாள் ஓர் அதனப்பிரசங்கி பிரசங்கமேடையின் மீதேறி—

கனவான்களே! சகோதர சகோதரிகளே! நான் இன்றையதினம் என்னபேசப்போகிறேன் தெரியுமா உங்களுக்கு:—என்றான். அதற்கு ஜனங்கள் "தெரியாது" என்றார்கள். உடனே பிரசங்கி "இப்படி ஒன்றும் தெரியாத மூட ஜனங்களுக்கு நான் எதைச் சொல்லித்தான் தெரியப்போகிறது. வீணே சிரமப்படுவதில் பிரயோசனமில்லை" என்று சொல்லிக்கொண்டு மேடையிலிருந்து இறங்கிப் போய்விட்டான்.

மறுநாள் அவன் மறுபடியும் மேடையின்மேலேறி ஜனங்களைப்பார்த்து "இன்றையதினம் நான் என்ன பேசப்போகிறேன் தெரியுமா?" என்று கேட்டான். இம்முறை ஜனங்கள் நேற்றுத்தான் தெரியாது என்று சொன்னோம். பிரசங்கியார் தெரியாதவர்களுக்குச் சொல்வதில் பிரயோசனமில்லை என்று சொல்லிப் போய்விட்டார். ஆகையால், இன்று தெரியும் என்று சொல்லிப்பார்க்கலாம் என்று நினைத்து "தெரியும்" என்றார்கள்.

பிரசங்கி:—ஓ! அப்படியா? தெரிந்தவர்களுக்கு நான் என்ன சொல்லப்போகின்றேன். வீணே என் காலத்தைப் போக்கவேண்டாம்—என்று சொல்லிப் போய்விட்டான்.

மூன்றாம் நாள் அவன் பிரசங்கம் செய்ய வந்தபோது முதல் நாள் தெரியாது என்றும் இரண்டாவது நாள் தெரியும் என்றும் சொன்னதற்குத்தான் பக்குவமாகப் பதில் சொல்லி ஏமாற்றிவிட்டான். இன்று நம்மில் சிலர் தெரியுமென்றும் சிலர் தெரியாதென்றும் சொல்லிப்பார்ப்போம்—என்ன செய்கிறான் பார்க்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டு சிலர், தெரியும் என்றும் சிலர் தெரியாதென்றும் சொன்னார்கள். பிரசங்கி, "அப்படியானால் உங்களில் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் இருக்கிறபடியால் தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குச் சொல்லலாமே. நான் ஏன் என் காலத்தை வீணே போக்கவேண்டும்" என்று சொல்லிப்போய் விட்டான்.

கிம்மீரவதம்.

கிம்மீரன் என்பவன் ஓரசுரன்; பகாசுரனுடைய தம்பி; பலத்தில், தன் அண்ணனைப் போல் தனக்கு மிஞ்சியவர் ஒருவருமில்லை யென்று இறுமாந்திருந்தவன்; மகா அகங்காரி; காமியகம் என்னும் வனத்தை இருப்பிடமாகக் கொண்டவன். *பகாசுரனைப் பீமசேனன் கொன்ற செய்தியைக் கேட்டதுமுதல் பீமனிடம் இவனுக்குப் பகைமை உண்டாயிற்று. பீமனைக் கண்டுபிடித்து, அவனைச் சித்திரவதை செய்து, பழிக்குப்பழி வாங்கினலொழியத் தன் மனம் சாந்த நிலையை அடையாதென்ற எண்ணம் நாளுக்கு நாள் இவனிடம் பெருகிக்கொண்டே வந்தது. பகை கொள்வது கொடியதல்லவா ?

† "இகலிற் கெதிர் சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாங் கேடு"—(குறள்)

என்கிறபடி ஒருவன் தன்மனத்திலெழுந்த பகையை வளர்க்காமல் தணிப்பானுயின் அது அவனுக்கு நன்மை தருவதாம். அவ்வாறு தணியவிடாமல் மேலு மேலும்

---

* பாலவிநோதினி 1921ஆ டிசம்பர்மீ தத்திய சஞ்சிகையில் பார்க்க

† இகலிற்கு-பகைமைக்கு; எதிர்சாய்தல் - இடங்கொடாதிருத்தல் (நேர்விரோதமாக நடத்தல்); ஆக்கம்-நலமாகும்; மிகலூக்கின்-அதன் விர்த்தியை மேற்கொள்ளின்; கேடு-அதன் பயனுகிய கெடுதி; ஊக்குமாம்-அவனைமேற்கொள்ளும்.

வளர்ந்துவரச் செய்வானாகில் அதன்பயனாகிய கெடுதியும் அவனிடம் விர்த்தியாய்க்கொண்டே வரும். இந்த உண்மை கிம்மீரனுக்குப் புலப்படவில்லை. பகையை வளர்க்கும் கோபமானது அவனுடைய மனதைத் தன்வசப்படுத்திக் கொண்டது. ஆகையால் அவன் பீமனை எப்போது சந்திக்கப்போகிறோமென்கிற எண்ணத்தில் முழுகி யிருந்தான்.

இப்படியிருக்கையில், வனவாசத்தை மேற்கொண்டு வந்த பாண்டவர்கள் இந்தக் காமியக வனத்திலும் சில நாள் தங்கநேரிட்டது. அப்போது ஒருநாள் தருமபுத்திரர் தமது தம்பிமாரையும் துரோபதையையும் பார்த்து "இந்த வனம் என்ன விநோதமாயிருக்கிறது; கண்ணுக்குக் குளிர்ச்சியையும் மனத்திற்கு மகிழ்ச்சியையும் தருகிறது; எங்குப் பார்த்தாலும் பச்சைப்பசேல் என்கிற நிறம் பரந்திருக்கிறது; செடிகளுங் கொடிகளும் மரங்களுங் (1) குரங்களும் அடர்ந்திருக்கின்றன. (2) சூல்கொண்ட மேகங்கள் தங்குவதற்குத்தக்க இடம் இதுவே என்று நிச்சயிக்கும்படி மரங்கள் மேகமண்டலத்தை அளாவி நிற்கின்றன. மலர்களும், பிஞ்சுகளும், காய்களும் கனிகளும் ஒவ்வொருமரத்திலும் ஏராளமாக இருப்பதைப் பாருங்கள். நமது வரவை ஆதரிக்க (3) அசேதனமான இத் (4) தருக்களிடந் தோன்றும் (5) அறிகுறியைக் கவனித்தீர்களா? புஷ்பங்களில் அனிச்சம் பூவானது மிகவும் (6) மேன்மையுடையது. அதை யொரு

(1) குரம்-தருப்பை; (2) சூல்-கருப்பம்; (3) அசேதனம்-பகுத்தறிவில்லாமை; (4) தரு-மரம்; (5) அறிகுறி-அடையாளம்; (6) மென்மை-மிருதுவாகிய தன்மை.

வர் தீண்டினாலன்றி அது வாடுகிறதில்லை. ஆனால் விருந்தாளிகளோ அந்த அனிச்சம் பூவினும் மிகவும் மேன்மையுடையவர்கள். அவர்கள் அதிருப்தியான முகக்குறியைக் கண்டமாத்திரத்திலேயே குழைந்து போவார்கள், அந்த உண்மையைத் தெரிந்துதானோ இச்செடி கொடி மரங்கள் நம்மைக்கண்டு, மலர்ந்த மலர்களாகிற (1) புன்முறுவலோடு கூடிய முகத்தைக்காட்டித் தலையையசைத்து (2) வரவேற்கின்றன. சுகதுக்கங்கள் மாறி மாறி வருவது எல்லாவுயிர்களுக்கும் இயற்கை என்பதை அறிந்து அவற்றில் சமநோக்கைக்கொண்டு எப்போதும் சந்தோஷக் குறியுடன் விளங்கும் அறிவாளரைப்போலப் பட்சிசாலங்களும், விலங்கினங்களும் சுயேச்சையாய் ஆடல்பாடல்கள் செய்து தம்தம் கிளைகளுடன் குதுகலித்திருக்கும் காட்சி நமது மனதை ஆனந்தப்படுத்தவில்லையா ?'' என்று சொல்லி அவ்வனத்தைச் சுற்றி வந்தனர்.

இவர்களை அந்தக்காட்டில் ஒருபுறமிருந்த கிம்மீரன் பார்த்து விட்டான். "யாரோ இங்கு உலாவி வருகிறார்களே! இவர்கள் யாராயிருக்கலாம்? நரமனிதராகத்தான் காணப்படுகிறார்கள். ஆகிலும் மலையுந் தூரத்தில் மழமழப்பு! ஆதலால் நாம் மோசம்போகக்கூடாது'' என்று தன்னிரண்டு கண்களையும் நன்றாகப் பிசைந்துகொண்டு ஏற விழித்துப்பார்த்தான். உடனே தன் புஜங்களிரண்டையுந் தட்டிக்கொண்டு "கண்டேன்-கண்டேன்'' என்று ஆனந்தக்கூத்தாடினான். "ஆம்-இவர்கள் பாண்டவர்களே. அதற்கோ ஆட்சேபனையுங்கிடையாது. அதோ அவர்

(1) புன்முறுவல்-புன்னகை (மந்தகாசம்); (2) வரவேற்றல்-அழைத்தல்.

கள் மத்தியில் ஆசாநுபாகுவாய் நிற்பவனே பீமன். பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்கிறபடி நெடுநாள் தேடிக்கொண்டிருந்த இவன் சணப்பன் வீட்டுக்கோழி தானே மாட்டிக்கொண்டது போல் வலிய

தீர்க்காலோசனை யில்லாத தீர்மானம்.

ஓர் ஐரோப்பிய வாலிபன் வெகு அழகாயிருந்தது கண்டு அவனை மணக்க விரும்பிய ஓர் ஐரோப்பியச் சிறுமி அவனிடம் நட்புக் கொண்டாள். நாளுக்கு நாள் அவனுடைய அழகும் அழகுக்குத் தகுந்த அன்பான இனிய வசனங்களும் அவனிடம் அவளுக்கு அதிக நேசத்தை உண்டாக்கின. இப்படி அன்பு பெருகிவரும் நாளில் ஒருநாள் சிறுமி தன் உத்தேச மணாளனைப் பார்த்து "நான் உன்னைக் கலியாணம் செய்து கொண்டால் என்னைக் காப்பாற்ற உனக்குப் போதுமான வருமானமிருக்கிறதா?" என்று கேட்டாள்.

கட்டழகன் எதடா வம்பாய் முடிந்தது என்று சற்றுத் தயங்கி "உன் தகப்பனுர் ஏதாவது மாதா மாதம் அனுப பினுல்........" என்று சொல்லி மேலே சொல்வதற்குள் சிறுமி முகத்தைச் சுளித்துக் கொண்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். இதைப்பார்த்த அழகன் வெட்கமுற்று மற்றோர் பக்கம் திரும்பிக்கொண்டான். கோத்துக் கொண்டிருந்த இருவர் காங் களுந் தாமே விலகின; மனம் மாறுபட்டது. அன்புதளர்ந்தது. நட்பு நகர்ந்தது. இவைகளைக்கண்ட கால்கள் அவர்கள் திரும்பிய பக்கத்து வழியே நடந்தன.

குழந்தைகளே! ஐரோப்பியர்களுள் ஆண்பெண் பாலார் சிறிதுகாலம் நேசம் பாராட்டித்தான் பிறகு கல்யாணம் செய்து கொள்வது வழக்கம். ஆய்ந்தோய்ந்து நேசம் பாராட்டி யிருந்தால் அதற்காக எடுத்துக் கொண்ட காலமும், சிரமமும் வீண் போகா வல்லவா? ஆகையால் எதையும் எண்ணித் துணிய வேண்டும், அன்றி எண்ணித் துணியாத செய்கை வெட்கைக்கேட்டைத் தரும். மக்களின் தன்மையை மாற்றும்.

வந்து சிக்கிக்கொண்டான். அடே! பீமா! தம்பியுள்ளான் படைக்கஞ்சான் என்றிருந்த என் அண்ணனை நீயா கொன்றவன்? துஷ்டா! காசெனொருவன் அவன் பின் றோன்றியவன், இருக்கிறேனென்பதை நீயறியவில்லையோ? சபாஷ்! தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் தானே. நீயும் ஓராண்மகன் போலக் கையில் தண்டமொன் றேந்திக்கொண்டிருக்கின்றாயே மூடா! தடி யெடுத்தவனெல்லாம் வேட்டைக்காரனாவானா? நீ கெட்டாய்! என்கைக்கு நீ எம்மாத்திரம்? இதோ உன் கொட்டத்தை ஒரு நொடியி லடக்கிவிடுகிறேன். பார்" என்று ஆர்ப்பரித்தான்.

உடனே அவன் கண்கள் துரோபதையின் மீது பாய்ந்தன. அவன் பீமன்மீது கொண்ட கோபத்தை அந்த நிமிஷமே மறந்தான். "அடடா! இவள் யார்? என்ன காந்தி. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமன் சகலமும் படைத்துக் கைதேர்ந்தபின் இவளைப் படைத்திருக்க வேண்டும்.

சமயோசிதமான பதில்.

ஒரு நாள் டில்லிபாக்ஷா தன் மந்திரியைப்பார்த்து, "எந்த நதியிலுள்ள ஜலம் சிரேஷ்டமானது?" என்று கேட்டார். மந்திரி "யமுனாநதியின் ஜலம்" என்று சொன்னார். இதைக் கேட்ட டில்லிபாக்ஷா "இந்துமதக் கொள்கையின்படி கங்கா நதியின் ஜலமல்லவா மிகவும் சிலாக்கியமானது? உனக்கு உன்னுடைய மதசம்பந்தமான விஷயமே தெரியாதுபோ லிருக்கிறதே!" என்றார். மந்திரி "பிரபோ, நான் விஷயம் தெரியாமல் சொல்லவில்லை. கங்காநதியிலுள்ளது அமிர்தம், ஜலமல்ல" என்றார். பாக்ஷா மந்திரியைப் பற்றித் தான் அபிப்பிராயப்பட்டது தவறு என்று நினைத்து மந்திரியின் பதிலுக்கு மகிழ்ந்தார்.

இவள் என் கண்களைமட்டுமா-ஏன்-என் இருதயத்தையு மல்லவா கவர்ந்து கொள்கின்ருள். என் பாக்கியமே பாக்கியம்" என்று துள்ளினன்.

* "இழந்தமணி புற்றரவு எதிர்ந்ததென லானன்
பழந்தனம் இழந்தன படைத்தவரை யொத்தான்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டான்
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையும் ஒத்தான்."

"இது தகாதகாரியமாயிற்றே. ஆண்மகனைப் பிறந்தவன் தன் சுதந்தரத்தை மறந்து இப்படியும் ஒரு பெண்மகளின் மீது துராசையுறலாமா? உலகத்தில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய நல்ல காரியங்கள் பல விருக்கின்றன. அவற்றில் ஈடுபடுவதற்காகவே ஆண்மக்களையும் பெண்மக்களையும் கடவுள் படைத்தருளினர். அந்த நல்ல காரியங்கள் எவை என்பதை சாஸ்திரங்கள் மூலமாகவும் பெரியோர்களின் மூலமாகவும் தெரிந்துகொண்டு அவற்றைச் செய்துவருவதற்காகவே கடவுள் நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிருர். அந்தப் பகுத்தறிவைக்கொண்டு நடக்க முடியாதவர்கள் ஆணகவோ பெண்ணகவோ பிறந்தும் பயனற்றவர்களே யாவர். அப்போது அவர்களுக்கும் ஜீவராசிகளுக்கும் வித்தியாசம் ஏற்படாது.

† "தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள

---

* இழந்த-கைவிட்டு நீங்கிய; மணி-மாணிக்கம்; புற்றரவு-புற்றிலுள்ள பாம்பு; எதிர்ந்தது-கண்டது; பழம்தனம்-பழமையான சொத்து; படைத்தவர்-பெற்றவர்; உயிர்த்த-பெற்ற; உழந்து-வருந்தி: உயிர்ப்பொறை-பிறவிக்குருடன்.

† தக்க-செய்யத்தகுந்தவை; இன்ன-இப்படிப்பட்ட காரியங்கள்; ஒக்க-பொருந்தும்படி; உன்னலர்-நினையாதவர்;

மக்களும் *விலங்கே மனுவின் னெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே ''

என்று நீதிநூல் நிகழ்த்துகின்றது. ஆதலால் நாம் ஒவ்வாத விஷயத்தில் தலையிடலாகாது'' என்கிற உயர்ந்த எண்ணம் ஆத்திரக்காரருக்கு எப்படி யுண்டாகும்? எதற்கும் நிதானம் வேண்டாமா? ஆய்ந்தோய்ந்து பாராத காரியம் ஒருவனுக்குத் தான் சாகுமளவும் சஞ்சலத்தை யன்றோ தந்துவிடும்?

இந்த ஆத்திரம் கிம்மீரனுக்கு எப்படி யுண்டாயிற்று? அவன் கொண்ட அகங்காரத்தினாலேயாம். தீயவை என்று உலகத்தில் ஏற்பட்டுள்ள எல்லாப் பாபச் செயல்களுக்கும் தாய்வீடாயிருப்பது இதுவே.

கொடிது கொடிது அகங்காரங் கொடிது
அதனினுங் கொடிது அவனியில் எது?
அதுவே அனர்த்தம் அனைத்திற்கும் மூலம்
குளிர்ந்த கண்ணரைக் குருடராக் குவதும்
செம்மைச் செவியரைச் செவிடாக் குவதும்
தனக்கு நிகர்எத் தலத்தும் இலையெனும்
திமிரை யளித்து நிமிரச் செய்வதும்
செயமுடி யாத செயலையும் நொடியிற்
செய்வேன் என்று செப்ப வைப்பதும்
கோப மென்னும் குடியைக் கெடுக்கும்
குழந்தையைக் கொடுத்துக் குலாவ விடுவதும்
இன்னும் பலவாய் மன்னும் விநோதம்
எல்லாம் முடிக்க வல்லதும் அதுவே
அறிந்ததை யடக்கும் ஆண்மைபெற் றவரே
சிறந்து விளங்குவர் செகதலந் தன்னில்
இன்பம் எய்தி (‖) என்மனார் புலவர்.

---

*விலங்கு-மிருகம்; மனுவின்நெறி-மனுதருமசாஸ்திரவழி; புக்கவேல்-நடப்பின்; புத்தேளிர்-தேவர்.

‖ என்மனார்-என்று சொல்லுவர்.

இப்படி அகங்கரித்த கிம்மீரன், " ஆ ஹா !—

* இந்திரன் சசியைப் பெற்றான்
இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்
தாமரைத் தடங்கண் ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்,
நீரணும் யானும் இந்தச்
சுந்தரி தன்னைப் பெற்றேன்
சுகமிதிற் சிறந்த துண்டே ?

என்று தலைகீழாகத் துள்ளினான். " இந்திராணி என்னும் பெண்ணுக்காக இந்திரன் நூறு யாகஞ்செய்தான். உமா தேவிக்காகச் சிவபிரான் இமயமலைச் சாரலில் பெரிய தவத்தைச் செய்தான். இலக்ஷ்மியின் பொருட்டு விஷ்ணு மூர்த்தி திருப்பாற்கடலைக் கைநோவக் கடைந்தான். இப்படிக் கஷ்டப்பட்டுப் பெற்ற நாயகிகளை அவர்கள் உயர்ந்த ஆசனத்திலும், பாகத்திலும், மார்பிலுமாகவைத்து ஆதரித்துவருகிறார்கள். என்ன பலன்? **கண்டதே காட்சி கொண்டதே கோலம்** என்கிற பழமொழி அவர்களுக்கடுக்குமா? இன்பம் எப்போதும் நினையாத முன்வந்து நிற்கும் சுகப்பொருளிலன்றி வேறெதிலும் இலேசாகப் பெருகாது" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, கனலிற் பிறந்த கனங்குழையாகிய துரோபதையைப் பிடித்தெடுத்துக்கொண்டு ஆகாய வீதியில் எழும்பிச் சென்றான்.

அப்போது பாஞ்சாலி பதறிக் கதறினாள்; " அடா மூர்க்கா ! என்ன காரியஞ்செய்தாய்? உன் கருத்துக்கு

* சசி - இந்திராணி; இருமூன்றுவதனம் - ஆறுமுகம்; தந்தை-சிவன்;

உட்படாத பெண்டுகளை நீ பரிசிக்கலாமா? அப்படி பரிசிப்பது உன்னை நிர்மூலமாக்கும் ஓர் ஆயுதமென்றறிவாயாக. உத்தமிகளும் நெருப்பும் ஒன்றுயிற்றே! ஆழ்ந்து பார்ப்போமானல் அவர்கள் நெருப்பைவிட மேற்பட்டவர்களென்றே சொல்லவேண்டும். சீதாதேவிக்கு நெருப்பு அஞ்சவில்லையா? பாவி! அகங்காரத்தால் ஏன் அழிந்துபோகத் துணிவுகொள்கிறுய். நான் சபித்தால் இந்த க்ஷணமே நீ நாசமடைவாய். கணவன்மார் அருகேயிருக்கும்போது பதிவிரதையர் அதிக்ரமித்து எந்தக் காரியத்தையும் தாங்களே செய்ய முற்படமாட்டார்கள். அந்த நியதியை எண்ணி நீ இந்தத் தீங்கில் நுழையலாகுய். தமயந்தியால் வேடனும், சாவித்திரியால் எமதருமனும், நளாயினியால் சூரியனும் பட்ட பாட்டை நீ கேட்டதில்லையா? பிறர் எச்சிலுக்கு இச்சைகொண்ட நாயே! ஜாக்கிரதை—ஜாக்கிரதை" என்று கிம்மீரனுக்குப் புத்தி புகட்டினள். இந்தநீதிகளுக்கென்ன அவன் பயந்தவனு? மூர்க்கருக்கு அறிவூட்டுவாருண்டோ? மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடுவதில்லை என்பது முதுமொழியாச்சுதே.—

இப்படி இவர்கள் சொல்வதை தண்டத்தை ஊன்றிக் கொண்டு அருகே நின்றிருந்த பீமன் பார்த்துவிட்டான். பார்த்ததும்,

* வன்றிறலில் வருமுனிவோ டெழுந்தனன்
மண் படைத்த முனிவரன்போல் ஊழி,
" அன்றெ ன ஆம் என இமையோர்
அயிர்த்தனர் மேல் வெயில் கரந்த தங்கும் இங்கும்

---

* வன்(மை)-கொடிய; திறல்-வல்லமை; முனிவு-கோபம்; மண்படைத்த முனிவரன்-விசுவாமித்திரர்; ஊழி-முடிவுகாலம்; அயிர்த்தல்-மயங்கல்; வெயில்-சூரியன்; கரத்தல்-மறைதல்.

நின்றனவும் திரிந்தன*மீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றன வந்தன நகையுஞ் சிவந்தன கண்
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம்."

உடனே பீமன் அண்டமுந் திசைகள் எட்டும் நடுங்கத் தோள்கொட்டி ஆர்த்தான். அழமறியாது காலிட்டுக்கொண்டவன் ஆரடா? என்றான்; துன்மார்க்கரைப் பல்லைப்பிடுங்கிப் பருந்தாட்டமாட்டிப் பாழுலகுக்கனுப்பவல்ல என் பராக்கிரமத்தைப் பார்க்கவா வந்தாய்? என்றான். என் அழகையும் நீ காணத்தான் வேண்டும். கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியன்றோ? வந்தேன் இதோ" என்று ஊன்றியிருந்த தண்டத்தைக் கீழே அழுத்தினான். அழுத்தியதும் ஆகாயத்திற் கிளம்பி நின்றான்; கிம்மீரனைத் தாவிப் பிடித்தான். "அடா! மானங்கெட்டவனே! நாணமற்றவனே! †குன்று முட்டிய குரீஇபோல் இப்போது என்னிடம் அகப்பட்டுக்கொண்டாயே. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்பவாபோகிறது? 'மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்', என்னும் முன்னோர் மொழியைப் பொன்னேபோற் போற்றுவதற்குத் தானே நீ இவ்வற்பத்தொழிலில் இறங்கினாய். சீ! சீ!! நீயும் ஒரு வீரனா? ;என் புயவலியை நீ யறிந்திலேயோ! ஏகும் நெறியறிந்திலாத நீசா!" என்று சொல்லி, அவனைக் கிள்ளுக் கீரையாக நினைத்துத் தன் கையை யோங்கி அவன் மார்பின்மீது ஒரு குத்துக் குத்தினான். கிம்மீரன் ஒரு கையால் துரோபதையைப் பற்றிக்கொண்டு மற

* மீ-மேலே; நிவந்த-நிமிர்ந்த; கொழும்-கொழுத்த.
† குன்று-மலை, குரீஇ-குருவி.

றொருகையால் பீமன் மார்பைநோக்கி ஒரு குத்து விட்டான். இப்படி இருவரும் ஒருவரையொருவர்,

†" எடுப்பர், பற்றியுற்று ஒருவரை யொருவர் விட்டு எறிவர்
கொடுப்பர் வந்து உரங் குத்துவர் கைத்தலங் குளிப்பக்
கடுப்பினில் பெருங் கறங்கெனச் சாரிகை பிறங்கத்
தடுப்பர், பின்றுவர், ஒன்றுவர், தழுவுவர், விழுவர்."

முடிவில் பீமன் தன் தண்டத்தால் கிம்மீரனை மோத அவன் துரோபதையுடன் கீழே விழுந்தான். தரையில் நின்றிருந்த அருச்சுனன் துரோபதையைக் கீழே விழாத படி தாங்கிக்கொண்டான். உடனே பீமன் கீழேவந்து கிம்மீரனை நையப்புடைத்து அவனை எமனுலகுக் கனுப்பினான். தேவர்கள் இதைக் கண்ணுற்று ஆனந்தசாகரத்தில் முழுகினவராய்ப் பீமசேனனை மலர்மழைபெய்து ஆசீர்வதித்தனர். தேவதுந்துபி முழங்கலாயிற்று. ஜெய பேரிகைகள் கோஷிக்கத்தொடங்கின. "இச்சரித்திரத்தை எழுதுவோர், படிப்போர், கேட்போர் யாவரும் தங்கள் மனோரதத்தை யடைந்து இகத்திலும் பரத்திலும் புகழோடு விளங்குவர்" என்று தேவர்கள் பீமன் முன் தோன்றி வரங்கொடுத்து மறைந்தனர். சுபம்.

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

---

† உரம்-மார்பு; கடுப்பினில்-விரைவாக; கறங்கு-காற்றாடி; சாரிகை-வட்டமாயோடி வளைத்தல்; பிறங்க-விளங்க; பின்றுவர்-பின்தங்குவர், ஒன்றுவர்-ஒன்றுகூடுவர்.

ஹாஸ்யம்.

ஓர் ஊரில் ஒரு குயவனிருந்தான். அவன் எழுத்து வாசனையில்லாதவன். ஆனால் எல்லோருக்கும் நல்லவன்! அவன் மனைவி பெரியபிடாரி, கைகேயியைப்போல் பிடிவாதக்காரி. அவள் ஒவ்வொரு சமயம் செய்யும் பிடிவாதத்தினால் குயவன் கோபங்கொண்டு பெருங்கூச்சலுடன் அடிக்கப்போவான்; சில சமயம் அடிக்கவும் செய்வான். குயவன் குட்டையாய், பானைபோல் உருண்டு திரண்டு பருத்திருப்பான். குயத்தி நெட்டையாய் ஏணிபோல் நீண்டு ஒடுங்கியிருப்பாள். குயவன் சினங்கொண்டு அவளை அடிக்கத் தன் தொந்தி குலுங்க ஓடுவான். அவள் இங்கொருகால் அங்கொருகாலாகவைத்து நடந்து தூரப்போய் நின்று பொய்க்கால் கட்டிக்கொண்டவளைப்போல் குதிப்பாள். இந்த வேடிக்கையை அநேகர் பார்ப்பதுண்டு.

இப்படியிருக்கையில் ஒரு நாள் குயவனுக்கும் குயத்திக்கும் சச்சரவுண்டாயது. அப்போது குயவன் கோபங்கொண்டு கையில் குண்டாந்தடி யொன்று எடுத்துக்கொண்டு "அடிகைகேயி! உன் பிடிவாதம் தசரதனிடம் செல்லுமே தவிர குண்டுக்குயவனிடம் எப்படியடி செல்லும்?" என்று சொல்லிக்கொண்டே ஓடிக் குண்டாந் தடியால் ஓர் அடிபோட்டான். அடி விழுந்ததும் குயத்தி "அடி ஆயாடி! பாவி எப்படிப் போட்டாண்டி!" என்று கூறிக் கீழே குந்தினாள். அங்கு நின்று வேடிக்கைப் பார்த்தவர்களில் ஒரு புத்திசாலி, "எந்தக்காலத்திலேயோ

போன கைகேயியின் பெயர் இந்தக்காலத்தில் இந்தக் குயவன் வாயிலே வருகிறது பாருங்கள்! என்ன செய்ய லாம், உலகத்தில் நல்ல குணசாலியாயிருந்து தன் புகழ் பரவ வாழ்ந்தவர்களுடைய பேரும் அழிவதில்லை; கெட்ட குணமுடையவர்களாயிருந்து தன்னை எல்லோரும் இகழ வாழ்ந்தவர்களுடைய பேரும் அழிவதில்லை. இருந்தா லும் புகழ்பெற்ற புண்ணிய சீலர்களைப்பற்றிப் பேசக் கேட்கும்போது சந்தோஷமாயிருக்கிறது. இகழ்ச்சி யடைந்த துராத்மாக்களைப்பற்றிப் பேசும் பேச்சு, 'அந்தோ! இவர்கள் ஏன் பிறந்தார்கள் உலகத்தில்' என்று வருந்தவேண்டியிருக்கிறது. சை! தசரதசக்கர வர்த்தியின் மனைவியைக் குயவன் இழுக்கிறானே சந்தி யில்! அந்தோ! பழியஞ்சாத வாழ்வும் வாழ்வா?" என்று கூறிவிட்டுப்போனான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நான், நமது பெண்களில் யாரும் கைகேயியாகக் கூடா தென்கிற எண்ணங்கொண்டேன். இப்படி நான் எண் ணிய மறுகணமே, இன்ன இடத்திலிருந்து வந்தானென் பது தெரியாமல் குயவனுடைய மைத்துனன் அங்கு வந்து குயவனைப் படேல் படேல் என்று இரண்டறை அறைந்து கீழே தள்ளினான். குயவன் பூசணிக்காயைப் போல் பொத்தென்று கீழே விழுந்தான். குயத்தி, கல் லென்று நகைத்துக் கைசொடக்கினாள்.

அப்பால் குயவனெழுந்து மைத்துனனைக் குத்தி னான். இருவருக்கும் சண்டை நடந்தது. இருவரும் அவ்வூர் கிராமமுனிசிப்பினிடம்போய் முறையிட்டார்கள். முனிசிப் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வருவதற்குள் அவ்வூர் ஜனங்களெல்லாம் அவன் வீட்டு வீதியில் தோர்க்

கூட்டமாகக் கூடிவிட்டார்கள். முனிசீப் வந்ததும், குயவன் "ஐயா, அடிமை குயவன் கும்பிடுகிறேன்" என்றான். முனிசீப், "அடே என்னடா சங்கதி?" என்று கேட்டார். குயவன் முன்னுக்கு வந்து நின்று, "ஐயா! நான் சொல்ல றத்தே கேளுங்க!" என்று கூறி உடம்பைக் குலுக்கிக் கொண்டு, "ஐயா! உங்க தங்கச்சிதான் என்பெஞ்சாதி; நான் அவளை அடித்தால் நீங்க என்னத்துக்குப் பயமவ ளுட்டம் ஓடியாந்து என்னை அடிக்கிறது? அடிக்கலாமா?" என்று கேட்டான். வந்து வேடிக்கை பார்த்தவர்களெல் லோரும் நகைத்தார்கள்! முனிசீப்பின் முகம் வாட்டங் கொண்டது! முனிசீப்பின் செவியிற்பட, "குயவன் நல்லாப்பேசினான்!" என்று அவரிடம் வெறுப்புள்ள சில மூடர்கள் சொன்னார்கள். முனிசீப், "இது மூடனுடைய பேச்சு! இதை நாம் கவனிக்கப்படாது" என்று கருதிப் புன்முறுவலுடன், "அப்பாலே" என்று கேட்டார். குயவன், குதித்துக் கையை ஆட்டிக்கொண்டு முன்னே வந்து "நீ அடிக்கலாமா? அடிக்கலாமா எஞ்சாமி செல் லுங்க" என்று கேட்டான்.

இப்படி இவன் கேட்கையில் முனிசீப்பினுடைய தங்கை, குயவன் தன் அண்ணனைப்பார்த்து கேட்ட கேள்வி, செவிக்கெட்டவே ஒருகையில் விளக்கு மாறும் ஒருகையில் சாணிச்சட்டியும் எடுத்துக்கொண் டோடி வந்து,"யாரடா உன் பெண்சாதி குண்டுக்கொசவா? கொழுத்தகொசவா?" என்று அதட்டிக்கொண்டு அடிக்க ஓடிவந்தாள். எல்லோரும் நகைத்தார்கள். முனிசீப் தன் ஆசனத்திலிருந்து எழுந்துவந்து தம் தங்கையை விலக் கினார். குயவன், "ஐயோ என் பெஞ்சாதி கைகேயி

யல்லவா ? உங்களையாரம்மா சொன்னது ?" என்று சொல்லிக்கொண்டு கைகுவித்துக் கும்பிட்டான். முனிசீப் தமது தங்கையை வீட்டிற்குள் போகும்படி சொல்லி உள்ளே அனுப்பினர். நான் என்னவென்று சொல்வேன் அந்த வேடிக்கையை! அப்பால் கால்மணி நேரம் சென்றது அமளியடங்க.

பிறகு முனிசீப், தமது ஆசனத்தமர்ந்து குயவனை நோக்கி, "அடே, நீபோய் இந்த வழக்கை உங்களவர்களுக்குள்ளேயே சொல்லிப் பஞ்சாயத்து மூலமாகத் தீர்த்துக் கொள் போ" என்றார். குயவன், "ஐயா! எங்களெள வெடுத்தவர்களைப் பார்க்கிலும் தாங்கள் தீர்ப்பு சொன்னால் அதை நான் ஆயிரம் மண்ணுடையார் (குயவர்) செய்த தீர்மானத்துக்குச் சமானமாகப் பாவிப்பேன்" என்றான். இதைக்கேட்டதும் முனிசீப் சினமடைந்து, "இவனை வெளியே தள்ளு! மூடன்!" என்று சேவகனுக் குத்தரவிட்டார். இதைப்பார்த்துக்கொண்டிருந்த நான், "நமது ஆடவர்களில் ஒருவரும் குயவனைப்போல் மூடனாயிருக்க வேண்டாம்" என்றெண்ணிக்கொண்டே அவ்விடமிருந்து திரும்பி இங்கு இதை உங்கட்குச் சொன்னேன். குழந்தைகளே, நீங்கள் புத்தியாய்ப் பிழையுங்கள்.

பாலவிநோதினி.

செல்வம்.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.

வறுமை.

அல்கா (1) நல்குரவு (2) அவா எனப்படுமே.

---

(1) நல்குரவு = வறுமை ; (2) அவா = ஆசை.

குளித்து முழுகும் குருவி.

(பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை பாடியது.)

குளித்து முழுகும் குருவீ !—உந்தன்
குணத்தை யான் கண்டு மகிழ்ந்தேன்.
தெளித்த நன்னீரில் குளிப்பாய்—உன்
சிந்தையின் செய்திக் களிப்பாய். 1

சுத்தத்தை நாடிக் குளிப்பாய்—உன்
தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தேன்.
பித்தர்கள் எண்ணிலர் மாந்தர்—அவர்
பெரிதும் அசுத்தத்தில் மாள்வார். 2

சுத்த உடைகள் உடுத்தார்—அவர்
தூய குணங்களைக் கொள்ளார்.
மித்தைகள் பேசிக் கழிப்பார்—அவர்
மெலிந்து வருந்திக் கழிவார். 3

சின்னஞ் சிறிய குருவீ !—உந்தன்
செயலினைக் கண்டறிந் தேனும்.
என்னின மாந்தர்கள் உந்தன்
இயற்கையைக் கொள்ளலா காதோ ? 4

பறவையும் விலங்கினந் தானும்—இந்தப்
பாரினில் சுத்தத்தை நாடும்
அறிவில் மிகுத்தவ ரென்பார்—இந்த
அவனியில் மானிடர் என்னே ! 5

நோயிலும் பேயிலும் வாழ்வார்—அவர்
துவலரு நரகத்தில் வாழ்வார்.
ஆயிரம் கூறியும் என்னே !—அவர்
அறிவு திருந்திடல் என்றோ ? 6

வாரத்தில் குளிப்பவ ருண்டு !—அரை
மாதத்திற் கொருமுறை உண்டு !
சீரற்ற மாந்தரிங் கிவர்கள்—நன்கு
தினந்தினங் குளித்திடல் என்றோ ? 7

பன்முறை நித்தம் குளிப்பாய்—உந்தன்
பான்மையைக் கண்டு மகிழ்ந்தேன்.
என்னவர் நன்றுறு மாறு—இதை
இசைத்து வைத்தே னடி தோழி ! 8

186456
சென்னை-600 008

ஒரு சிறுகதை.

ஒரு ஊரில் நூலாராய்ந்த ஒருவர் இருந்தார். அவர் தம்மைப் பலேவித்வான் என்று சொல்லிக்கொள்வார். அதனால் எல்லாரும் அவரை 'பலேவித்வான்' என்றே கூப்பிட்டார்கள்.

நமது பலேவித்வான் கண்களின் ஆழத்தையும், கன்னக்குழிவையும், நெஞ்சின் கூட்டையும் பார்த்தாலே அவர் படிப்பில் எவ்வளவுழைத்திருப்பாரென்பது தெரியும். ஆரிய பாஷையிலுள்ள ஒவ்வோரெழுத்திற்கும் ஒவ்வொரு கவி சொல்வார்; புராணமும் கட்டுவார். பேச ஆரம்பித்தால் பாணினி, வியாசர், வால்மீகி எல்லாரும் அவர்வாயில் பட்டு விழிப்பார்கள். ஒரு பாட்டு எடுத்தால் தம் விரிவுரையில் இலக்கணங்களையெல்லாம் புகட்டிப் பதங்களைக் கண்டதுண்டமாக்கிப் பாவைச்சூர்ணப்படுத்தி விடுவார். கேட்போர் மட்டும் தூங்காமலிருக்க வேண்டும். அவருடைய பயத்திற்காக விழித்திருந்தோமானால் தூங்காவரம் பெறத் தவம்புரியவேண்டும்.

அடுத்த வீட்டில் யாரேனும் ஒரு சுலோகம் உச்சரிப்புத் தப்பிச் சொல்லிவிட்டால் "நேற்றுப்பயல்களெல்லாம் படிக்க ஆரம்பித்து வித்வான் என்று வெளியில் வந்து விட்டார்கள். நானே இன்னும் படிக்கவேண்டியது இருக்கிறது. இவர்களை வால்மீகிதான் கேட்கவேண்டும், காளிதாசன் தான் கேட்கவேண்டும்" என்று சுலோகபூர்வமாய்க் கத்த ஆரம்பித்து விடுவார். தெருவிலுள்ளோர்

தூக்கம் வரும்வரையில் தங்கள் நகையால் அவருடைய கோபத்தைப் பெருகச்செய்து பிறகு சந்திரனையே கேட்கும்படி விடுத்துச்செல்வார்கள்.

ஊரில் ஒரு வித்வான் வந்து விட்டால், அவர்களிடம் தம்பிரதாபங்களைக்கூவ ஆரம்பித்துத்தான் இராமாயணம், பாரதம், பாகவதம் இவற்றினின்றெடுத்தெழுதிய கதைகளைப் படிக்க ஆரம்பித்து விடுவார். வந்தவன் பேஷ் பேஷ் என்று கேட்காவிடின் பிடித்தது தொண்டைக்குக்கேடு. "உனக்கு ஹம்ஸோபநிஷத் தெரியுமா, ப்ருகுவல்லி, கடம், கேனம், தண்டி தெரியுமா" என்று கேட்க ஆரம்பித்து விடுவார். இதெல்லாம் அவருக்கே தெரியுமோ வென்பது தான் எனக்குச் சந்தேகம். ஏதேனும் தவறித் தெரியாது எனில் அதைத்தாம் தெரிந்தது போல்பேசி, "இதெல்லாம் பார்க்காது வெளியே வந்துவிட்டாய்! காலக்கொடுமை! எல்லாரும் இப்படி வித்வானென்று பெயர் வைத்து வெளிக்கிளம்புகிறார்கள். இவர்களைக் கண்டனம் செய்ய ஒருவருமில்லையா?'' என்று ஸ்வீகாரமெடுத்துக்கொண்ட இளங்கைம்பெண்போல் ஆரம்பித்து விடுவார். எவர் எவ்வளவு கற்றிருந்தால் இவருக்கென்ன? மற்றோரிடமுள்ள தெய்வத்தன்மை இவருக்குத் தெரியுமா? தம் கல்வி மேன்மையைக் காட்டுவதே இவர் புன்மையைக்காட்டும்.

இப்படியிருக்க, ஒருநாள் ஒருதாசரி, தம்பூரை மீட்டித் தன் குரலை அதனோடு இணைத்து பக்தி நிரம்பிய ராமதாஸ் கீர்த்தனங்களைப்பாடித் தெருவழியே வந்தான். ஊர் சிறுரெல்லாம் அவனைச் சூழ்ந்து சமயங்களில் தாங்களும் பாடிக்கொண்டு வந்தார்கள். மேலும் இங்குமங்குமோடித்

தாசரிக்கு அரிசிவாங்கிக்கொண்டு வந்தார்கள். தாசரி மிகவும் களிப்புண்டு ராமநாமத்தை உருகிப் பாட ஆரம்பித்தான்.

பலேவித்வான் அப்போதுதான் சூரிய நமஸ்காரம் செய்துகொண்டிருந்தார். கூட்டத்தைப்பார்த்தார்; சங்கதியை அறிந்தார்; தம் பல்லவியை ஆரம்பித்து விட்டார். "இந்தப்பயல்கள் நான், பலேவித்வான், இராமாயணம் வாசித்தால் வருவதில்லை. அமரம் சந்தை சொல்லக்கூப்பிட்டால் ஒளிகிறார்கள். புராணத்தை தினம் விளக்கிற்கே சொல்லவேண்டியிருக்கிறது. ஒரு பிச்சைக்காரனோடு குதிக்கிறார்களே" என்று தூஷணாஸ்திரத்தைச் சிறுவர் மேல் தொடுத்தார். பிள்ளைகள் அவரைச் சுற்றிக் குதிக்க ஆரம்பித்து விட்டார்கள். மேலே பட்டுவிடுவார்களென்றோ அல்லது நமது திறமை செல்லாதென்றோ பலேவித்வான் உள்ளே போய்க் கதவைச் சாற்றிக் கொண்டு வீரியம் பேசினார்.

நிற்க, ஊரெல்லாம் தாசரியின் பாட்டிற்குருகி இரவில் தாசரியைப் பாடும்படி கேட்டுக்கொண்டார்கள். தாசரி வணக்கத்துடன் ஒப்புக்கொண்டான். அவ்வூர் மிராஸ்தார் வீட்டுத்திண்ணையில் ராமர் படத்தை வைத்து, அலங்கரித்திருப்பது நமது வித்வான் பொறாமைத்தீயை ஊதி விட்டது. "என்னவாசனை, என்ன புஷ்பம், சந்தனம், அலங்காரம்!" என்று படத்தைப் பார்த்துப் பல்லைக்கடித்தார். மற்றெல்லோரும் படத்தை நமஸ்கரித்து உட்கார்ந்தார்கள். தாசரி சர்வசாதாரணமாய்க் கீர்த்தனங்களைப் பாடினான். ஜனங்கள் மனது பக்தியில் நின்றது. கண் கொட்டவில்லை. வித்வான் மட்டும் "இந்தப் பயல்கள்

டீ குடித்து இவன் பாட்டை விழித்திருந்து கேட்கின்றனர். நான் பலேவித்வான், இராமாயணம் வாசிக்கும்போது வேண்டுமென்று உறங்குகிறார்கள்" என்று மனதில் குரோதப்பட்டார். தமதுபுத்தக மூட்டைக்கு இடம் காணுமல் அதைத் தன்மடிமேல் நமது வித்வான் வைத்துச் சமயம் பார்த்திருந்தார். கிராமத்து ஜனங்களெல்லாரும் தாசரிக்குத் தக்க பரிசளித்தனர். ஆடை, பொன், வெள்ளி எல்லாம் தாசரியிடம் செல்லச்செல்ல வித்வானுடைய கோபம் கொழுந்துவிட்டெரிந்தது. தம்மை ஒருவரும் உபசாரம் செய்யவில்லை என்றதும் சேர்ந்தது. எழுந்தார்; புத்தக மூட்டையைச் சபையில் எரிந்து "நான் இத்தனை நூல்கள் வாசித்திருக்கிறேன். என் தலை மயிர்கூடக் கலை நிறமானது. நான் பலேவித்வான். உங்களுக்குத்தோன்ற வில்லையா என்மதிப்பு? நேற்று வந்த தாசரிதானு பெரிதானுன். உங்களை மனுவே கேட்க வேண்டும், வியாசரே கேட்கவேண்டும்" என்று பலவித மாகப்பாட ஜனங்கள் சிரிப்பால் சுருதிகூட்ட ஆரம்பித்து விட்டார். மேலும் "தாத்தா உட்காருங்கள்" என்று சிறுவர் அவரை உட்காரும்படி செய்தார்கள். தம்மை வித்வான் என்னுமல் தாத்தா என்றதற்காக மறுபடியும் வெகுண்டு கோபத்தை தாசரி மேல் தாக்கினர்.

"தாசரீ! நீ ப்ரம்மசூத்ரம், தசோபநிஷத், பகவத்கீதை படித்திருக்கிருயா? சபையில் வந்து சம்மானம் வாங்கி விட்டாயே. ஒரு கனம்சொல்லு பார்ப்போம்" என்று வேங்கைப் புலியாகப் பிடித்துக்கொண்டார். அவர் சொன்னதெல்லாம் சொன்னல் படிப்பவர் பொறுமை யிழப்பார்.

தாசரி:—பணிவுடன் அவரடி தொழுது "அடிமைக்கு ராமநாமமே தெரியும். எழுத்தும் படிப்பும் தெரியாது" என்று சொல்லி ராமநாமகானம் செய்யத்தொடங்கினன். ஜனங்கள் தாசரியை இன்னும் மெச்சி வித்வான் கோபத்திற்கு ஆகுதி செய்தனர்.

வித்வான்:—ஆழ்ந்து யோசித்து, தாசரியை அழைத்து "உனக்கு ஏதாவது வஸ்யமந்த்ரம் தெரியுமோ?" என்ருர்.

தாசரி:--எனக்கு அவசியமான ராமநாமமே தெரியும்.

வித்வான்:—உனக்கு சங்கீதப் பழக்கம் உண்டோ?

தாசரி:—எனக்கு ராமபாத சேவையே வழக்கம்.

வித்வான்:—கேள்விஞான முண்டோ?

தாசரி:—எனக்குத் தாழ்மைஞானமே உண்டு.

வித்வான்:—பயமின்றிச் சபையில் பேசுகிருயே.

தாசரி:—பயம் இல்லை ஸ்ரீராமஜெயமே துணை.

இதைக்கேட்ட வித்வான் அன்று முதல் தலை குனிந்தே நடக்க ஆரம்பித்தார். தொண்டைக்கு வேலை குறைந்தது. கைமார்பை விட்டு நீங்கி அன்பருக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டது. புத்தகக்கத்தைகளை விட்டார்.

செருக்கு விடுக! செம்மொழி பூணுக!
தருக்கம் விடுக சாந்தம் நடுக!
பணிவு கொள்ளுக பாரினுள் வெல்லுக!
சின மகற்றுக சீர்மை பற்றுக!

என்றதை உறுப்போட்டு நற்குணமடைந்து அடைந்து அறிந்து அடங்கினர்.

"செருக்கில்லாச் செம்மனமே தெரியுமுயர்கலையைத்
தருக்கக் கலையேனே தான்"

ஜே. வெங்கட சுப்ரம்மண்ய பாரதி,
தேவகோட்டை.

வன்னத்தின மாவைத் தெள்ளியே, என்ற
காவடிச்சிந்து மெட்டு.

சுப்ரமண்யர் ஸ்துதி.

கந்தாவுன் தன்னடிப், போதிலே—மிக
காதல் கொண், டேனிந்தப், போதிலே—எனைக்
காப்பாயே செல்லாது, தீதிலே—என்றுங்
கடம்பாமலர், நறுமாமணத், திடமாகிய, விரிமார்பிடை
கசிந்து உதிர்ந்திடுங், தாதிலே—மனங்
கரைந்துபா டச்செய்யுன், மீதிலே. (1)

சுந்தரப் பன்னிரு தோளனே—செழும்
சோதியே நல்லரு ளாளனே—சந்தத்
தோகைம யிலேறுந் தாளனே—தினம்
தொகையாகிய, புலவோர்பல, வகையாகவே, கவிபாடிடும்
சுந்தர மங்கைபங் காளனே—மகிழ்
சுதனுகும் வள்ளிம ணாளனே. (2)

சந்ததம் பாடுமென் சிந்தையே—யிந்தச்
சஞ்சல மேன்நீயுந் தந்தையே—யிதைச்
சாற்றினு லேவரும் நிந்தையே—யென்றுஞ்
சகமார்தரு, பலவாந்துயர், மிகுவாழ்வினில், விழலாகுமோ
தாழ்வுறு வாழ்வாகும் விந்தையே—போக்கித்
தண்ணருள் தாராயோ, எந்தையே. (3)

பந்தமி குந்துயுன் வாதமே—பண்ணிப்
பட்டிட லாகுமோ? போதமே—அருள்
பாவுமு னையென்றும் வேதமே—கண
பதி சுப்பிர மணியன்றனக் கதிசுப்பிர கவிதைநலம்
பண்பாய ளித்திடு நாதமே—யென்றும்
பாடுவ னுனதிரு பாதமே. (4)

S. R. கணபதி சுப்ரமண்ய அய்யர்,
தமிழ்ப் பண்டிதர்,
போர்டு ஹை ஸ்கூல், கொள்ளேகாலம்.

...நாடு அரசுக் காப்பக நூலகம்
186456
சென்னை-600 008

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

சுப்ரமண்யபரமான புத்தகங்கள்

வெளியாய்விட்டது. மூன்றாம்பதிப்பு.

சுப்ரமண்யர் தோத்திரக்கொத்து

இப்பதிப்பில் கிரகமணிமாலை, 9-பாடல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அணா நான்கு.

	ரூ.	அ.
சரவணபவதாசர் பாடிய சிவசுப்ரமண்யர் பஜனை கீர்த்தனை	0	6
கந்தரனுபூதி மூலமும் உரையும்	0	6
கந்தரந்தாதி ஷை	0	6
திருமுருகாற்றுப்படை	0	5
சூதசங்கிதா சாராம்ருத வசனம் கலிகோ கில்டு பைண்டு	1	8
கந்தபுராண வசனம் நாவலர் பதிப்பு ...	4	8
கந்தர் சஷ்டி கவசம் மூலமும் உரையும் ...	0	5
கந்தரலங்காரம் ஷை	0	5
திருப்போரூர் சந்நிமுறை மூலம்	0	12
கந்தப்புராணம் செய்யுள் 2-வால்யம்	6	8
ஷை சுருக்கம் சுப்ரமண்ய சிவாசாரியாரியற்றியது	0	8

விலாசம் :—மானேஜர், பாலவிநோதினி ஆபீசு,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

ஸ்ரீ சுப்ரமண்யர் திருவிளையாடல் அஷ்டோத்ர சத நாமாவளி — அருச்சனை அகவல் பூஜைசெய்வதற்கு உபயோகமானது ...	0	3
ஸ்ரீ சுப்ரமண்யர் கந்தரகவல் — பாராயணம் செய்யத் தகுதியானது ...	0	3

விலாஸம் :—

N. S. இராமசந்திரய்யர் B.A. L.T.,
17, வெள்ளாளத்தெரு, புரசைபாக்கம்,
மதராஸ்.

10034/81

AYURVEDIC
EYE TREATMENT

OF

Mr. T. S. AMIRTHALINGAM PILLAI

OF TANJORE NOW IN MADRAS.

SELECT OPINION

M. R. Ry. M. Nataraja Pillai Avl. B.A., B.L., Vakil, Tanjore, Writes:—(Dated 1-7-1922).

"Mr. T. S. Amirthalingam Pillai is known to me for a long time as an oculist of high repute. Many cases which were quite the despair of English doctors have passed successfully through his hands. My wife was suffering 8 months back from 'Vana Sukkilam' (வாணசுக்கிலம்) in her left eye which completely obliterated her vision. This indeed gave me grave anxiety and I sought the aid of Mr. T. S. Amirthalingam Pillai who, with his wonted courtesy, undertook to treat her. The medicines administered by him were slow of working and therefore safe. But the cure effected was sure and radical. I am glad to testify that she is completely immune from any defect in her eye and the usual vision is restored to its prestine vigour. **I can boldly say without fear of any challenge that he can be entrusted with the treatment of complicated diseases connected with the eye.**"

Patients will be attended to by Mr. Pillai from 7 to 9 A. M. and 4 to 6 P. M.

For further particulars please apply to:—

DR. V. R. SUNDARAM.

Ayurveda Vaidya Mandiram,

No. 268, Pycropt's Road, Rayapettah, Madras.